**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**13 நவம்பர் 2015 / 01 ஸஃபர் 1437**

# மற்றவர்களிடம் காணப்படும் நற்காரியங்களில் கவனம் செலுத்துதல்

اَلْحَمْدُ لِلَّهِ الَّذِي أَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدَى وَدِيْنِ الْحَقِّ بَشِيْراً وَنَذِيْرًا
وَدَاعِياً إِلَى اللَّهِ بِإِذْنِهِ وَسِرَاجاً مُنِيْراً وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ
وَصَفِيُّ اللّهِ مِنْ خَلْقِهِ وَحَبِيْبُهُ إِمَامُ الأَنْبِيَاءِ وَسَيِّدُ الْمُرْسَلِيْنَ اَللّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْماً كَثِيْرًا.
أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللّهِ اتَّقُوْا اللّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ
مُسْلِمُوْنَ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்ஹம்துலில்லாஹ்! (எல்லாப் புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே உரித்தாகுக!). மீண்டும் ஒருமுறை இப்புனிதமிக்க வெள்ளிக்கிழமை தினத்தில் இங்கு ஒன்று கூடி, அல்லாஹ்வின் அருள்களையும் வெகுமதிகளையும் பெறுகின்ற வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான். எனவே, நமது ”தக்வா” (இறை பக்தியை) அதிகரித்துக்

கொள்வதன் மூலமும், அல்லாஹ்வின் எந்தக் கட்டளையையும் புறக்கணிக்க மாட்டோம்; அவன் ஏற்படுத்தியுள்ள தடைகளை மீற மாட்டோம் என்பதை உறுதி செய்வதன் மூலமாகவும் அல்லாஹ்வுக்கு நமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வோமாக!

ஜமாஅத்தார்களே!

கடந்த வாரப் பிரசங்கத்தில், நமது குடும்பத்தார்களுக்கும் நமக்கு நெருக்கமாக உள்ளவர்களுக்கும் சன்மார்க்கக் கல்வி எந்த அளவு அவசியம் என விவாதிக்கப்பட்டது. உண்மையில், நாம் பெற்றோர்கள் எனும் ரீதியில், நமது பிள்ளைகளிடம் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டு விடும் என்று மட்டும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல், இஸ்லாமியக் கல்வியறிவை நாமும் பெற்றிருப்பது அவசியமாகும். இன்றைய பிரசங்கத்தில், ஜனங்களில் ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு இஸ்லாமியக் கல்வியறிவு வழங்கப்பட ஏற்பாடு செய்வதிலும், அவர்களுக்கு உதவி செய்வதிலும் நாம் அக்கறையற்றவர்களாக இருக்கக் கூடாது என்பதை உங்களின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். அக்குறிப்பிட்ட வகுப்பார்கள், கடந்த காலத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு, தற்போது புதியதொரு சகாப்தத்தின் பால் திரும்பி, தம்மை முன்னேற்றிக் கொண்டிருப்பவர்கள் ஆவர். ஏற்கனவே தவறிழைத்தவர்கள் விஷயத்தில்- அவர்களை அவர்களின் தவறுகளிலிருந்து திருத்துவதற்காக- இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் காட்டியுள்ள முன்மாதிரியான நன்னடத்தைகளை (அக்லாக்) இங்கு நாம் ஆய்வு செய்வோம்.

இமாம் புகாரி (ரஹ்) தனது ஹதீதுக் கிரந்தத்தில் பதிவு செய்துள்ளார்கள்:

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு மனிதர் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களை அடிக்கடி சிரிக்க வைத்து, மகிழ்ச்சியூட்டி வந்தார். எனினும், அம்மனிதரிடம் ஒரு பலஹீனம் காணப்பட்டது. அவர் போதைப் பொருளை உட்கொள்பவராக இருந்தார். அவருக்குப் பலதடவை அதற்கானத் தண்டனைகள் வழங்கப்பட்ட போதிலும் கூட தொடர்ந்து அவ்வாறு செய்து வந்தார். ஒருநாள், ஒரு நபித் தோழர் அவரைப் பார்த்து: "யா அல்லாஹ்! இம்மனிதர் மீது உனது கோபத்தை ஏற்படுத்துவாயாக!" என்று கூறினார். இதனைக் கேட்ட நபி(ஸல்) அவர்கள்: "அவருக்கு எதிராக சாபமிடாதீர்: காரணம், நான் அவரிடம் ஒரு நல்ல விஷயத்தைக் காண்கிறேன்; அதுதான் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் அவர் நேசிப்பதாகும்" என்று கூறினார்கள்.

சுப்ஹானல்லாஹ்! (அல்லாஹ் மிகவும் மேன்மையானவன்). இவ்வாறு தான் இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் ஒவ்வொருவரின் நலனிலும் அக்கறை கொண்டு, அவர்களின் நற்காரியங்களில் கவனம் செலுத்தினார்கள். இங்கு நான் கூற நினைப்பது, தவறான செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களை தொடர்ந்து அவர்களின் நிலையிலேயே விட்டு விட வேண்டும் என்பதல்ல. மேற்கண்ட சம்பவத்தின் கருத்தும் அதுவல்ல. இங்கு நான் சுட்டிக் காட்ட விரும்பும் கருத்து யாதெனில், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் ஒரு மனிதரின் பலஹீனத்தை அறிந்திருந்த போதிலும், அவரிடம் காணப்படும் பலம் மற்றும் கிருபைகளைக் கவனத்தில் கொண்டிருந்தார்கள் என்பதாகும். ஒரு மனிதர் எவ்வளவு தான் கெட்டவராக இருந்த போதிலும் அவரிடமும் நிச்சயம் சில நல்ல தன்மைகள் காணப்படும். அந்த நல்ல தன்மைகளிலும் கவனம் செலுத்துவது அவசியமாகும். மற்றவர்களை அல்லாஹ்வின் பாதையின்

பால் அழைப்பதில் இம்மாதிரியான அணுகுமுறையைத் தான் பின்பற்ற வேண்டுமென ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் நமக்குப் போதித்துள்ளார்கள்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

நாம் அனைவரும் பல தவறுகளையும் பாவச் செயல்களையும் புரிந்த மனிதர்களாக உள்ளோம். ஒரு காலத்தில் நாம் ஷைத்தானின் தவறான வழிகாட்டுதலால் ஆதிக்கம் செலுத்தப்பட்டோம். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு எதிராகச் செயல்பட்டோம். எனவே, நமது தலைகளைப் பணிவுடன் தாழ்த்தி அல்லாஹ்விடம் பாவமன்னிப்பைத் தேடிக் கொள்வோமாக! மேலும், நமது பாவங்கள் மலையளவு காணப்பட்ட போதிலும் நாம் அருள் மழைப் பொழியப்படுபவர்களாகவே உள்ளோம். காரணம், அல்லாஹ்வின் அன்பும் கிருபையும் அவனது கோபத்தை மிகைத்து விடுகின்றன. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் ”அஜ்-ஜுமர்” எனும் அத்தியாயத்தின் 53-54 வரையிலான வசனங்களில் கூறுகின்றான்:

۞ قُلْ يَٰعِبَادِىَ ٱلَّذِينَ أَسْرَفُوا۟ عَلَىٰٓ أَنفُسِهِمْ لَا تَقْنَطُوا۟ مِن رَّحْمَةِ
ٱللَّهِ ۚ إِنَّ ٱللَّهَ يَغْفِرُ ٱلذُّنُوبَ جَمِيعًا ۚ إِنَّهُۥ هُوَ ٱلْغَفُورُ ٱلرَّحِيمُ ﴿٥٣﴾

وَأَنِيبُوٓا۟ إِلَىٰ رَبِّكُمْ وَأَسْلِمُوا۟ لَهُۥ مِن قَبْلِ أَن يَأْتِيَكُمُ ٱلْعَذَابُ ثُمَّ
لَا تُنصَرُونَ ﴿٥٤﴾

பொருள்: (நபியே!) கூறுவீராக: “தங்கள் ஆன்மாக்களுக்குக் கொடுமை இழைத்துக் கொண்ட என் அடியார்களே! அல்லாஹ்வின் கருணை பற்றி நம்பிக்கை இழந்து விடாதீர்கள். திண்ணமாக, அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னித்து விடுகின்றான். அவன் பெரிதும் மன்னிப்பவனும், கருணையாளனும் ஆவான். உங்கள் இறைவனின் பக்கம் திரும்பி விடுங்கள். மேலும், உங்கள் மீது வேதனை வருவதற்கு முன்பாகவே! அவனுக்கு அடிபணிந்து விடுங்கள். இல்லையெனில், எங்கிருந்தும் உங்களுக்கு உதவி கிடைக்காது.

பாசத்திற்குரிய ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட வசனங்களில் இரு கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். **முதன்முதலாக,** நாம் அல்லாஹ்வின் பாதையின் பால் திரும்பி, அவனிடம் பாவமன்னிப்பு கேட்க வேண்டுமெனவும், நமது தவறுகளையும் பாவங்களையும் நாம் உணர வேண்டுமெனவும் அல்லாஹ் எப்போதும் எதிர்பார்த்துக் கொண்டிருக் கின்றான். நாம் அவ்வாறு செய்யும் போது அல்லாஹ் தனது எண்ணற்ற நிஃமத்களை (அருள்களை) நம்மீது பொழியக் காத்துக் கொண்டிருக்கின்றான். ஒவ்வொரு இரவின் மூன்றாம் பகுதியில் அல்லாஹ் நமக்கு நெருக்கமாக இருக்கின்றான்; தனது அடியார்களில் யாராவது பாவமன்னிப்புத் தேடுகிறார்களா என எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றான். ஹதீதுல் குத்ஸியில் (அதாவது அல்லாஹ் கூறவதாக நபி(ஸல்) கூறும் ஹதீதில்) அல்லாஹ் கூறுகிறான்:

” (என் அடியார்களில்) யார் என் பக்கம் நடந்து வருகிறாரோ அவர் பக்கமாக நான் ஓடிச் செல்கிறேன்” (அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி), ஹதீது நூல்: புகாரி)

மேற்கண்ட ஹதீதின் மூலம், நாம் அல்லாஹ்வின் பக்கம் நெருங்க வேண்டுமென்பதையும், அவனிடமே எதையும் கேட்க வேண்டுமென்பதையும் எந்தளவு அல்லாஹ் விரும்புகிறான் என்பது புலனாகிறது.

**மேற்கண்ட வசனங்களில் காணப்படும் இரண்டாவது கருத்து**: அல்லாஹ் நமது பாவங்களை மன்னிப்பான் என்பதில் நாம் நிராசையாகாமலிருப்பதுடன், அல்லாஹ்வை விட்டும் இன்னும் வெகு தொலைவிலிருக்கின்ற சக முஸ்லிம்களை நாம் கைவிட்டு விடக் கூடாது எனவும் மேற்கண்ட வசனங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன. அல்லாஹ்வின் புறத்திலிருந்து அவர்களுக்கும் ”ஹிதாயத்” (நேர்வழி) கிடைக்கும்; அவர்களிடம் சிறப்பான மாற்றங்கள் ஏற்படும் என்பதில் நாம் நிராசையாகி விடக் கூடாது எனவும், அல்லாஹ்வின் நேர்வழியை இதுவரை ஏற்றுக் கொள்ளாமலிருப்பவர்களிடம் மென்மையாக நடந்து கொள்ள வேண்டுமனவும் நமக்கு நினைவூட்டுகின்றன. நமது நண்பர்கள் அல்லது உறவினர்களில் எவராவது இன்னும் அல்லாஹ்வின் கட்டளைகளைப் புறக்கணித்து வந்தால், பாவமானச் செயல்களைச் செய்து வந்தால் அவர்களுக்கு எதிராக கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாம். மேலும், அவர்கள் தமது தவறான பாதைகளை மாற்றி, இஸ்லாத்தை அறிய முற்பட்டால் அவர்களின் முயற்சிகளையும் எண்ணங்களையும் ஏளனமாகக் கருத வேண்டாம். அவர்கள் நல்ல வழிகாட்டுதலின் பாலும் சன்மார்க்கக் கல்வியறிவின் பாலும் அதிக

அவசியமானவர்களாக உள்ளார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மற்றவர்களுக்கு உதவி புரிவதில் தொண்டூழியம் செய்யுமாறு நாம் அவர்களிடம் கேட்டுக் கொள்ள வேண்டும். நாம் அவர்களுடன் தொண்டூழியம் புரியும் போது தொழுகை நேரம் வந்து விட்டால் உங்களுடன் சேர்ந்து தொழுவதற்கு அவர்களையும் அழையுங்கள். எனினும், சன்மார்க்கத்தைச் செயல்படுத்த அவர்கள் தயாராகாத போது அவர்களுக்கு எதிராக கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாம். அவர்களின் உணர்வுகளைப் புண்படுத்த வேண்டாம். மாறாக, நாம் நமது வணக்க வழிபாடுகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வர வேண்டும். அவர்களின் உள்ளங்கள் மென்மையாகி, மார்க்கத்தைப் பற்றிப் பிடிப்பதற்கு தயாராகும் வரை, மார்க்கத்தைச் செயல்படுத்துமாறு தொடர்ந்து நாம் அவர்களிடம் மரியாதையாக வேண்டிக் கொண்டே இருக்க வேண்டும். இவ்விதமான நண்பர்களையோ அல்லது குடும்ப உறுப்பினர்களையோ நாம் பெற்றிருந்தால் அவர்களை நமது செயல்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும். தேவைப்பட்டால், அவர்கள் தமது வாழ்க்கையை மாற்றி சிறப்பாக அமைத்துக் கொள்ள அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அவ்வாறு செய்வதன் மூலம், அல்லாஹ்வின் நேர்வழியை ஏற்கும் வகையில் அவர்களின் உள்ளங்களை அல்லாஹ் திறந்து விடுவான்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

கர்வம் நம்மை மிகைத்து விடாமலிருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். மற்றவர்களை விட நாமே சன்மார்க்கத்தைச் சிறப்பாக கடைப்பிடிக்கின்றோம்; நாமே மற்றவர்களை விடச் சிறந்தவர்கள் எனும்

தற்பெருமை மிக்க உணர்வுகள் நம்மிடம் ஏற்பட்டு விடக் கூடாது. இவையெல்லாம் ஷைத்தானின் புறத்திலிருந்து நமக்கு ஏற்படும் ஊசலாட்டங்கள் ஆகும். ஷைத்தான் எப்போதும் நம்மீது ஆதிக்கம் செலுத்த விரும்புகிறான். எனவே, நாம் விழிப்புணர்வுடன் இருப்பது அவசியமாகும். அடிக்கடி சன்மார்க்க வகுப்புகளுக்குச் செல்பவர்கள் தொண்டூழியங் களையும் நற்காரியங்களையும் அதிகம் புரிய வேண்டும். நினைவில் கொள்ளுங்கள்! ஷைத்தான் வணக்க வழிபாடுகளை விட்டும் நம்மைத் தடுக்காமலிருக்கலாம்; ஆனால், கர்வமிக்கவர்களாகவும், பெருமை கொள்பவர்களாகவும் நம்மை ஆக்க அவன் முயல்வான். அப்போது நமது ”இபாதத்” (வணக்க வழிபாடுகள்), நற்காரியங்களால் எவ்வித பலனையும் அடைய முடியாதவர்களாக, அனைத்தையும் இழந்தவர்களாக நாம் ஆகி விடுவோம்.

ஜமாஅத்தார்களே!

ஒருவர் அதிகம் பாவம் செய்பவராக நமக்குத் தென்படலாம்; ஆனால், ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் தனது பாவங்களை நினைத்து அவர் உச்சகட்டமாக வருந்தும் போது, அல்லாஹ் அவரது வருந்துதலை ஏற்று, தனது திருப்தியைப் பெற்ற அடியார்களில் நின்றும் அவரை ஆக்கி விடுவதற்கு வாய்ப்புள்ளது. இதனை அல்லாஹ்வைத் தவிர வேறு யாராலும் அறிய முடியாது. திருமணமான பின்பும் விபச்சாரத்தில் ஈடுபட்ட ஒரு பெண்ணின் வரலாற்றை இமாம் முஸ்லிம் (ரஹ்) தனது ஹதீதுக் கிரந்தத்தில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்கள்:

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்த அந்தப் பெண்ணின் விபச்சாரக் குற்றத்திற்கானத் தண்டனையை அவளுக்குப் பிறப்படுத்தப் பட்டது. பின்பு அவளுக்கு அதற்கான தண்டனையை நிறைவேற்றுமாறு ரசூலுல்லாஹி (ஸல்) கட்டளையிட்டார்கள். தண்டனையைப் பெற்று அவள் இறந்த பின் அவளுக்காக நபி(ஸல்) ஜனாஸா தொழுகை நடத்தினார்கள். அப்போது செய்யிதினா உமர் (ரலி) அவர்கள்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! விபச்சாரம் புரிந்த இப்பெண்ணுக்கு நீங்கள் தொழுகை நடத்தினீர்களே இது சரியா? எனக் கேட்டார்கள். அதற்கு ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள்: ”இப்பெண் தனது பாவத்தை நினைத்து உச்சகட்டமாக ”தவ்பா” செய்துள்ளார்கள் (வருந்தியுள்ளார்கள்). இவர்களின் ”தவ்பா” வை (வருந்துதலை) மதீனாவிலுள்ள எழுபது நபர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுமானால் அவர்கள் அனைவரின் பாவங்களும் மன்னிக்கப்பட இப்பெண்ணின் ”தவ்பா” போதுமாகும்” என்றார்கள்.

எனவே, நாம் எவ்வளவு தான் பாவங்களைப் புரிந்த போதிலும் மன்னிக்கப்பட மாட்டோம் என நிராசையாகக் கூடாது. அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுங்கள்! அப்பாவங்களை விடுவதற்கு கடின முயற்சி செய்யுங்கள். அப்பாவங்களை விடுவதற்கும், புதிய அத்தியாயத்தைத் துவங்குவதற்குமான ஆற்றலை வழங்குமாறு அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மன்னிப்பைப் பெறுவதற்கு பல வாய்ப்புகள் உள்ளன. அல்லாஹ்வின் அருளை அடைவதற்கான பல வாய்ப்புகளை அல்லாஹ் நமக்கு ஏற்படுத்தியுள்ளான். ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

ஐங்காலத் தொழுகைகளுக்கிடையே புரியப்பட்ட பாவங்களும், இரண்டு ஜும்ஆத் தொழுகைகளுக்கு இடையில் புரியப்பட்ட பாவங்களும், இரண்டு

ரமதானுக்கு இடையில் புரியப்பட்ட பாவங்களும் (பெரிய பாவங்கள் புரியப்படாத வரை) அத்தொழுகைகள் மற்றும் நோன்புகளின் காரணமாக மன்னிக்கப்படுகின்றன. (பெரிய பாவங்கள் புரியப்பட்டால் அதற்காக வருந்தி மன்னிப்புக் கேட்டால் தான் மன்னிக்கப்படும்.) (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு நேர்வழி காட்டுவானாக! அவனது அன்பையும் திருப்தியையும் பெற்ற அடியார்களில் நின்றும் நம்மை ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.